DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -39

| | | |
|---|---|---|
| Name | : திரு. செல்லப்பன் | Caste: |
| Father's Name: | திரு. கோவிந்தசாமி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 8th day of February -2024.

**A1 , A2, A7, A9, A13 and A17 present. A5, A6, A8, A11, A14 to A16 and A18 called absent. Petition u.sec.317Cr.P.C filed and allowed. A3 produced.**

**08.02.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது வங்குடி கிராமத்தில் கீழதெருவில் வசித்து வருகிறேன். இறந்துபோன காசிநாதன், மகாலிங்கம், சுரேஷ், பிரபு, தர்மலிங்கம் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். எங்கள் ஊரில் காளியம்மன் கோவில் கணக்கு வழக்குகளை மச்சகேந்திரன் என்பவர் பார்த்துக்கொண்டிருந்தார். அந்த கணக்க வழக்குகளை மச்சகேந்திரடமிருந்து மாற்றி தேசிங்குபாலன் என்பவரை பார்க்க சொன்னார்கள். அதன் காரணமாக காசிநாதன் வகையறாவிற்கும், தேசிங்குபாலன் பிரிவினருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது.

மேற்படி மச்சகேந்திரன் பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட்டார். அத்தேர்தலில் எதிரி ரவிசந்திரன், கொளஞ்சி, பாஸ்கர் ஆகியோரும் போட்டியிட்டார்கள். காசிநாதன் தரப்பினர் மச்சகேந்திரனை ஆதரித்தார்கள். அத்தேர்தலின் காரணமாகவும் மேற்படி

இரு பிரிவினருக்கும் பிரச்சனை இருந்து வந்தது. காசிநாதனின் வயலின் வழியாகத்தான் தேசிங்குபாலன் அவரது வயலுக்கு போகமுடியும். தேசிங்குபாலன் கடந்த 2007 ஆம் வருடம் ஒரு நாள் காசிநாதனின் வயலின் வழியாக அவரது வயலுக்கு சென்று கொண்டிருந்தபோது அதனை ராஜலிங்கம் தடுத்துள்ளார்.

அதனால் அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது. அந்த சண்டையின் காரணமாக தேசிங்குபாலன் ராஜலிங்கம் வீட்டிற்கு ராஜலிங்கத்தை அடிப்பதற்காக போனார். அந்த சமயத்தில் அடிதடி நடந்திருக்கிறது. அதில் தேசிங்குபாலன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். ராஜலிங்கம், செல்வம், மச்சகேந்திரன் ஆகியோர் கேஸ் கொடுப்பதற்காக சென்றார்கள். அந்த பிரச்சனையின் காரணமாக எதிரிகள் பழனிசாமி, தினேஷ், ராஜதுரை, பிரபாகரன் ஆகியோர் எனது வீட்டை அடித்து நொறுக்கி வீட்டில் இருந்த பொருட்கள் மற்றும் ஆடுமாடுகளை எடுத்து சென்றுவிட்டார்கள். எனது வீட்டை சூரையாடிவிட்டார்கள்.

நான் ராஜலிங்கம் குடும்பத்திற்கு பங்காளி என்பதால் எனது வீட்டை சேதப்படுத்திவிட்டார்கள். மேற்படி எதிரிகள் ராஜலிங்கம் வீட்டையும் அடித்து நொறுக்கிவிட்டார்கள். ராஜலிங்கம் வீட்டிலிருந்தும் ஆடுமாடுகளை பிடித்து சென்றுவிட்டார்கள். தேசிங்குபாலன் கொலை வழக்கு சம்மந்தமாக போலிசார் ராஜலிங்கம், சுரேஷ், பிரபு, மகாலிங்கம் ஆகியோர்களை பிடித்து சென்றுவிட்டார்கள். அதிலிருந்து இரண்டு மாதங்கள் கழித்து மேற்படி நபர்கள் ஜாமீனில் வெளிவந்துவிட்டார்கள்.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஒரு நாள் நான் வண்ணாங்குளத்திற்கு போய்விட்டு திரும்பி வந்தபோது பாபு என்ற நபர் என்னிடம் எதிரிகள் ராஜதுரை, தினேஷ் மற்றும் சிலர் நின்று கொண்டு மகாலிங்கம், ராஜலிங்கம், பிரபு ஆகியோர் ஜெயிலுக்கு போய்வந்துவிட்டும் அடங்கமாட்டிகிறாங்க எனவே அவர்களை கொன்றுவிடவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்ததாகவும், அதனை அவர் கேட்டதாகவும் என்னிடம் தகவல் சொன்னார். வழக்கு சம்பவமானது நடைபெறுவதற்கு சுமார் 1 மாதத்திற்கு முன்பு பாபு மேற்படி தகவலை என்னிடம் சொன்னார்.

நான் வழக்கமாக எதிரிகள் அப்படித்தான் பேசிக்கொண்டிருப்பார்கள் என்று நினைத்துக்கொண்டு போய்விட்டேன். நான் சென்னைக்கு போய்விட்டு வழக்கு சம்பவமானது நடப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு வங்குடிக்கு வந்துவிட்டேன். சம்பவமானது 2008 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. தேதி சரியாக நினைவில்லை.

சம்பவம் நடந்த தினத்தன்று பூராசாமி என்பவரின் கடையின் அருகே வைத்து மகாலிங்கத்தை எதிரிகள் தினேசும், ராஜதுரையும் வெட்டினார்கள். எதிரிகள் தங்கள் கைகளில் கத்திகள் வைத்திருந்ததால் நான் பயந்து கொண்டு பக்கத்தில் போகவில்லை. மகாலிங்கம் இறந்துவிட்டார். காளியம்மன் கோவில் அருகே கூட்டமாக இருந்ததால் நான் அந்த கோவில் பக்கமாக சென்றேன். கோவில் அருகேயுள்ள சூலத்தில் தர்மலிங்கத்தின் தலை குத்தப்பட்டிருந்தது.

அந்த கோவிலுக்கு பக்கத்தில் பிரபுவின் தலை தரையில் கிடந்தது. அவரது உடல் பாலுசாமி வீட்டிற்கு பக்கத்தில் கிடந்தது. தர்மலிங்கத்தின் தலையில்லாத உடலும், காசிநாதனின் பிரேதமும் வேலாயுதம் என்பவரது வீட்டின் அருகே கிடந்தது. அந்த இடத்திற்கு அருகிலேயே ஜானகி காயங்களுடன் கீழே விழுந்து இழுத்துக்கொண்டிருந்தார். போலிசர் என்னை விசாரித்தார்கள். எதிரிகள் ராஜதுரையும், தினேசும் இன்று இந்நீதிமன்றத்தில் இல்லை. ( அந்த எதிரிகள் இருவரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை). சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகள் ஒவ்வொருவரையும் சரியாக அடையாளம் காண்பிக்கிறார்.

சம்பவம் நடந்த மறுதினம் என்னை போலிசார் விசாரித்தார்கள். சம்பவமானது காலை 10.00 மணிக்கு நடந்தது.

<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காசிநாதன் குடும்பத்தினர் சாராய வியாபார தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். காசிநாதன் எனக்கு பங்காளி முறை வேண்டும். தர்மலிங்கம் எனக்கு அண்ணன் முறையாகவேண்டும். சுரேஷ் எனக்கு பங்காளி. பிரபுவும் எனது உறவினர் தான். மேற்படி நபர்கள் எனது உறவினர்கள் என்ற சங்கதியை நான்

போலிசார் விசாரணையில் சொன்னேன். சம்பவத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்பாக நான் ஊருக்கு வந்துவிட்டேன் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். ஜானகியை போலிசார் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு கொண்டுசென்றார்கள் என்றால் காலை சுமார் 10.00 மணி இருக்கும். ஜானகியுடன் போலிசாரை தவிர வேறு யாரும் உடன்செல்லவில்லை என்றால் அதனை நான் கவனிக்கவில்லை.

சம்பவம் தொடர்பாக யார் போலிசாருக்கு தகவல் சொன்னது என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்து சுமார் ஒருமணி நேரத்தில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். தேசிங்குபாலன் கொலை நடந்த சமயத்திலிருந்தே எங்கள் ஊரில் சுமார் 10 போலிசார் வேறு எதுவும் அசம்பாவிதங்கள் நடப்பதை தடுக்கும் வண்ணம் பாதுகாப்பு பணியில் இன்று வரை இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

அப்படி பணியில் இருந்த போலிசார் ஜெயங்கொண்டம், மீன்சுருட்டி மற்றும் ஆண்டிமடம் காவல்நிலைய போலிசார் என்றால் சாட்சி முதலில் சரி என்று சொல்லிவிட்டு பின்னர் அதைபற்றி தனக்கு தெரியவில்லை என்று சொல்லுகிறார். சம்பவ தினத்தன்று சுமார் 300 போலிசார் வங்குடி கிராமத்திற்கு வந்தார்கள் என்றால் நிறைய பேர் வந்தார்கள். 300 பேர்கள் வந்தார்களா என்று எனக்கு தெரியவில்லை.

இறந்துபோனவர்களின் பிரேதங்களை போலிசார் அன்றைய தினம் சுமார் பிற்பகல் 12.00 மணிக்கு பிரேத பரிசோதனை செய்வதற்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள் என்றால் எனக்கு நேரம் தெரியவில்லை. எனக்கு ஒருமாதிரி இருந்ததால் நான் வீட்டிக்கு போய்விட்டேன் என்று சாட்சி சுயமாக கூறுகிறார். எனது வீட்டிற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் 40 முதல் 50 அடி தொலைவு இருக்கும் என்றால் சரிதான்.

அன்றைய தினம் மாலை 6.00 மணிவரை நான் வீட்டில் தான் இருந்தேன். வங்குடிகிராமத்தை சேர்ந்தவர்களுக்கும் அருகிலுள்ள காடுவெட்டி கிராமத்தை சேர்ந்தவர்களுக்கும் இடையே ஜாதி பிரச்சனையின் காரணமாக பேருந்துகளில் ஏறுவது தொடர்பாக அடிக்கடி தகராறு ஏற்படும் என்றால் சரிதான். சம்பவத்தில் வெளியூரை

சேர்ந்த நபர்கள் எத்தனை பேர் கலந்து கொண்டார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

காடுவெட்டி கிராமத்தை சேர்ந்த குரு என்பவர் எங்கள் ஊருக்கு தேர்தல்களில் வாக்கு கேட்டு வரக்கூடாது என்று எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் பிரச்சனை செய்தார்கள் என்றால் அதுபோன்று நடந்திருக்கிறது. எனவே மேற்படி குரு என்பவர் வாக்கு கேட்டு எங்கள் ஊருக்கு வராமல் இருந்தார் என்றால் சரிதான். மேற்படி குரு என்பவர் எங்கள் கிராமத்தினர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரி உண்ணாவிரதம் இருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

சம்பவம் நடந்த மறுதினம் தான் போலிசார் என்னை விசாரித்தார்கள். சம்பவம் நடந்த தினத்தன்று பிற்பகல் நேரத்தில் சம்பவம் தொடர்பாக போலிசாருக்கு தெரியப்படுத்துவதற்கு நான் முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக நான் வெளியூர் சென்றுவிட்டேன். என்னுடன் வேறு யாரும் வரவில்லை. சென்னைக்கு போயிருந்தேன். சென்னையிலுள்ள எனது பெரியம்மா கவிதா என்பவர் வீட்டிற்கு போயிருந்தேன். எனது பெரியம்மா வீட்டில் சுமார் ஒரு மாதம் தங்கியிருந்தேன்.

நான் சென்னைக்கு சென்று எனது பெரியம்மா வீட்டில் தங்கியிருந்ததை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. சம்பவம் நடந்த தினத்தன்று நான் ஊரில் இல்லை என்றாலும், சம்பவம் நடந்து ஒருவாரம் கழித்து தான் நான் ஊருக்கு வந்தேன் என்றாலும் சரியல்ல. காசிநாதன் ஊரில் சாராய வியாபாரம் செய்யகூடாது என்று ஊர் மக்கள் ஆட்சேபித்து வந்தோம் என்றால் சரியல்ல. போலிசார் சொல்லி கொடுத்து முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை சொல்லியிருக்கிறேன் என்றாலும், எனது முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றாலும் சரியல்ல.

எதிரிகள் தினேசும், ராஜதுரையும் மற்ற எதிரிகளுடன் சேர்ந்து வண்ணாங்குளத்திற்கு அருகில் வைத்து காசிநாதன் குடும்பத்தினரை

கொன்றுவிடவேண்டுமென்று பேசிக்கொண்டிருந்ததாகவும், அதனை பாபு என்ற நபர் கேட்டு எனக்கு தகவல் சொன்னதாகவும் சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றாலும், அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. அப்படி உண்மையிலேயே எதிரிகள் பேசி அது சம்மந்தமாக எனக்கு தகவல் கிடைத்திருந்தால் அத்தகவலை நான் காசிநாதன் குடும்பத்தினருக்கு தெரியபடுத்தியிருப்பேன் என்றாலும், எதிரிகள் யாரும் அப்படி பேசவில்லை என்றால் சரியல்ல.

பூராசாமி கடையின் அருகே வைத்து எதிரிகள் தினேஷ், ராஜதுரை ஆகியோர் மகாலிங்கத்தை வெட்டியதாகவும், அதனை நான் பார்த்ததாகவும் உண்மைக்கு புறம்பாக சொல்லுகிறேன் என்றாலும், அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. இறந்துபோனவர்கள் எனது உறவினர்கள் என்பதால் போலிசார் சொல்லிகொடுத்து பொய்யான சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

<u>13–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 12 ஆம் வகுப்பு படித்திருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். சம்பவ சமயத்திலும் நான் கூலி வேலை தான் செய்து வந்தேன். வழக்கு சம்பவம் தொடர்பாக நான் பார்த்த சங்கதிகள் அனைத்தையும் எனது முதல்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். விட்டுபோன சங்கதிகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தபோது எனது முதல்விசாரணையில் என்ன சங்கதிகளை சொல்லியிருக்கிறோனோ அந்த சங்கதிகளை தான் சொன்னேன்.

மகாலிங்கம் வெட்டப்பட்டதை நான் கிழமேல் ரோட்டில் வந்துகொண்டிருந்தபோது சுமார் 20 அடி தூரத்தில் இருந்து பார்த்தேன். நான் கிழக்கிலிருந்து மேற்காக வந்தேன். மகாலிங்கம் தெற்கே இருந்து வடக்கு நோக்கி ஓடிவந்தார். மகாலிங்கம் வேலாயுதம் என்பவரது தோட்டத்திலிருந்து வடக்கு நோக்கி ஓடிவந்தார். எதிரிகள் ராஜதுரையும், தினேசும் கிழக்கே இருந்து மேற்கே ஓடிவந்தார்கள். பூராசாமி கடையிலிருந்து சுமார் 20 அடி தொலைவில் மேற்படி கிழமேல் தெருவில் வைத்து மகாலிங்கத்தை வெட்டினார்கள். மகாலிங்கம் அந்த தெருவிலேயே விழுந்துவிட்டார்.

சம்பவமானது சுமார் 15 நிமிடத்தில் நடந்து முடிந்துவிட்டது. சம்பவதினத்தன்று நான் ஊரில் இல்லை என்றாலும், இறந்துபோனவர்கள் எனது உறவினர்கள் என்பதால் போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**3, 6 மற்றும் 8 –ஆம் எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

**Sd/– G. Sri Rama Jeyam,**
**III Additional District Judge,**
**Salem.**